**Subscription.**

Inland: Rs. 100/- year
For Advertisement
Apply to:
The Manager,
'The Morning Star,'
182, First Cross Street
JAFFNA.

# THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q / J / 104 / News / 89

Established : 1841 : A Christian Weekly: Published Every Friday

Vol:- 150 Jaffna, Friday 05 January 1990 No:- 01

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

News and Articles in Tamil and English. Please send them to

THE EDITOR,
'The Morning Star,'
182, First Cross Street,
JAFFNA.

## St. John's Church, Chundikkuli bids farewell to the Rev. & Mrs. J. Sarvananthan.

The Parish farewell to the Rev. J. Sarvananthan, Vicar of St. John's chundikkuli for the last 12 years took the form of a Thanksgiving Holy Communion Service at 7.00 a.m. on Sunday the 24th of December. Bishop Ambalavanar celebrated and preached the Sermon. The service was followed by a fellowship breakfast at the Peto Hall, at John's and this was followed by the Farewell meeting. Dr. E. S. Thevasagayam presided at the function in the absence of the Archdeacon of Jaffna, the Ven. Donald Kanagaratnam. Dr. Thevasagayam read a message from the Archdeacon expressing his own appreciation for the devoted services of the Rev. Sarvananthan.

Speaker after speaker then followed representing various sections of the Parish and the Churches expressing their gratitute to the Rev. Sarvananthan for his truly devoted and dedicated pastoral ministry at St. John's. He had a special care for the young and for the sick and the lonely. His sermons were always challenging, instructive and inspiring. Like the good wicket keeper he was in Cricket, he learnt to take on all kinds of bowlers and played his game fearlessly. The speakers wished the Sarvananthans God's blessings as they went to take up their new responsibilities at St. Paul's, Kynsey Rd, Colombo and in the Chaplaincy work at the General Hospital Colombo.

Mrs. A. S. Sivagnanam, spoke on behalf of the Mother's union. Mr. N. Thampoe on behalf of the youth Fellowship, Dr. T. W. Jeyakularajah on behalf of the Parish, the Rev Isaac Selvaratnam on behalf of his fellow clergy and the Rt. Rev. D. J. Ambalavanar representing the Sister Churches in Jaffna. Mr. A. Jeyaveerasingam, the Treasurer of the Church made a presentation on behalf of the Parish and Mr. N. J. Navaratnarajah, the Vicar's Warden proposed a vote of thanks. Bishop Ambalavanar closed the meeting with prayer and Benediction.

---

## Correction.

Paragraph I in the news item "World Council of Churches on Sri Lanka Situation" which appeared on the first page of our last issue dated 29.12.89 should read as follows:

1. "Respect for human life, the exercise of restraint and the abandoning of all violence as a means of solving problems."

We regret the omission of the words "the abandoning of."

## WEDDING.

1. *" ABIDE IN HIS LOVE... THAT YOUR JOY MAY BE FULL.'.*

The marriage was solemnised between Sathy son of Mr. & Mrs. J. V. Kulasingham of Puloly and Rushira daughter of Mr. & Mrs. C. K. Kunanayagam of Colombo 8, on Friday the 29th of December at 3.30 p. m. at the Methodist Church, Kollupitiya. The bride is a grand-daughter of the late Mr. L. P. Thurairatnam and Mrs. Thurairatnam. The Rev. H.R. Jeyachandran Solemnised the marriage and Mr. S. Williams preached the Homily. A Largely attended reception followed at the Hotel Taprobane.

2. *" GOD LIVES IN UNION WITH US, & HIS LOVE IS MADE PERFECT IN US."*

Mr. Joseph Chelvaseelan, and Salome Dhamayanthi were united in Holy Matrimony at the D.R.C. Church, Wellawatte on Saturday the 30th of December at 4.30 p. m. Chelvaseelan is a son of Mr. & Mrs. Thomas Thevarajah presently of Montreal, Canada, and Salome a daughter of Mr. & Mrs. Alex P. Rajaratnam of Mount Lavania. The Rev. T. S. Premarajah. solemnised the marriage and the Rev. S. Jeyanesan preached the homily. The Rev. D. R. Ampalavanar said the closing prayers and gave the blessing. The bridegroom is a grandson of the late Rev. & Mrs. G. D. Thomas of the Jaffna Diocese of the C. S. I. The Service was followed by a largely attended reception at the Hotel Taj Samudra.

3. **Ajitkumar - Sulochana**

Ajitkumar Joseph son of the late Mr. A. R. Joseph and the late Mrs Joseph and Sulochana Thamber were united in wedlock at the Uniting Church Carrington Avenue, Strath Field, Sydney on the 23rd of December at 4.30 p.m.

## The Rev. Dr. DANIEL POOR.

## SERVICES FROM 1815 TO 1885

Daunted was not he of the fury of high Seas
As he sailed by 'Dryad' with other American Missioneries
Nineteenth century's rare gift to (Pen) insular Jaffna
Inundating it with preaching from afar
Educating the Jaffnese including shy women
Love, Compassion did he, exude from within
Painstakingly he started Batticota Seminary
Outstanding institution was it, of East Asian envy
"Onwards" was his motto probably
Remembered will he be, through every century.

Navamany Luther Selvarajah
(Old girl & former Teacher of Jaffna College).

## "How Many Divisions has the Pope?"

Joseph Stalin is said to have made his famous remark in response to a suggestion made by the British Prime Minister about consulting the Pope, "How many divisions has the Pope?" A friend who has written to us about 1989 as an eventful year of the marvelous non-violent revolutions in Eastern Europe and the dismantling of the Communist Empire suggests that after nearly 45 years these events have provided the answer to Stalin's question, "Enough to outlast yours."

## The Tamil Senior Citizens Fellowship, Victoria,

has decided to fund a project in Jaffna through Community aid abroad (Australia) and the Thrift and Co-operative Credit Societies, Jaffna, which aims at giving financial assistance to young widows in the North affected by the current situation, (initially some 50 in number) to help them in income - generating activities such as Agriculture, Animal husbandry and Cottage Industries. Mr. A. S. Joseph is President of the Fellowship, Mr. S. Padmarajah, the Secretary and Mr. P. C. A. Handy, the Treasurer. The TamilChristian Congregation of Victoria had their Festival of seven Lessons, seven Lyrics and four Carols, on Sunday December 10, 1989 at 5 p.m. The message was given by Mr. Mohan Ariaratnam. Included in the programme was a Carol sung by Sunday School Children and another 'Mistletoe and Wine' by the, Youth Choir - The Service concluded with the familiar Tamil lyric 'ராஜாதி ராஜமணி, தேவ ராஜ்யத்தின் ஜீவமணி' The Rev. A. J. C. Selvaratnam is the Priest in charge of St. Peter's Church Murrumbeena, Victoria. The Secretary is Mr. J. T. N. Handy and the Treasurer is Mr. I. Solomon.

## BHARATHANATYA ARANGETAM

We have pleasure in reporting an interesting cultural event to take place in london on saturday the 6th of January at 7-00 p.m. at the Logan Hall, University of London, Institute of Education. The three young daughters of the Rev. Dr. Wesley Ariarajah and Mrs. Shyamala Ariarajah- Sudharshini, Niroshini and Anushini who have followed their rigorous training in Bharatanatyam under a distinguished teacher in Geneva Mrs. Sujatha Venkatesh will perform their Arangetam. Dr. Diana L. Eck, Professor of Comparative Religion and Indian Studies at the Harvard University - U. S. A. will preside at the occasion. It is encouraging to note that Tamil families abroad are nurturing their traditional cultural arts.

---

## OBITUARY

We regret to record the death of Mrs. Irene Padmini Arulrajah on Friday the 30th December at the residence of her sister and brother - in - law Mr. & Mrs. A Paul at Vaddukoddai. Padmini who was 47 years of age is a daughter of the late Mr. & Mrs. Edwin Samuel of Navaly. The funeral service took place at Vaddukoddai conducted by the Pastor, the Rev. A. Jeyakumaran, assisted by the Rev. T. Thevanesan and Mr. A. Paul. The Rev. Sam Alfred preached the sermon. Bishop Ambalavanar said the benediction. The remains were taken for burial at the Manipay Church Graveyard where the Rev. Sam Alfred performed the committal rites assisted by the Rev. T. Thevanesan. Padmini leaves behind besides her husband T. Arulrajah (Canada) three brothers and two sisters. Edwin Samuel, Dr. Merwin J. Samuel, F. Solomon Samuel all now in the U. S. A. and Mrs. Pamela Beadle of Navaly and Mrs. Vinothini Paul of Vaddukoddai.

# Voices of A Silenced Nation.

( Selections from the Report of a Team Visit to Sri Lanka by the Programme to Combat Racism of the World Council of Churches — **October 1989.** )

The nation of Sri Lanka has been silenced. There is a rising cycle of terror that is causing a clattering, crashing, cacophony of silence. Cries of pain are muted. Anger and anguish are reduced to sighs. Conversation is guarded. Trust is non-existent. Possible voices of justice are choosing survival over truth.

Sometimes it seemed that people would speak to us in Jaffna and Colombo only because they knew we were not members of the Indian Peace Keeping Force (the IPKF), the Tamil militant groups, the Sri Lankan army, paramilitary forces or the Research and Analysis Wing of India (RAW). Having been trusted in this way, the mandate of our Team Visit is to communicate the voices we heard.

## THE SILENCING OF THE TAMILS

Psalm 6:6 **"I am worn out with grief, every night my bed is damp from my weeping."**

The fourth largest army in the world occupies the North and East regions of Sri Lanka.

"India, making use of its own 'Monroe Doctrine', wants to Control Sri Lanka. It is protecting itself from the USA trying to entrench itself in Sri Lanka" (Voice 1)

Homes, schools and churches are destroyed in the fighting. The IPKF occupies all the homes it wishes, and some families have returned to their homes only to discover they have been used, destroyed and abandoned by the IPKF. In the Jaffna area 6,000 civilians have been killed along with 2,000 IPKF soldiers and 600 militants of the Liberation Tigers of Tamil Eelam (LTTE).

Jaffna is under martial law. There is no freedom of speech, no law and order, no police, no court system, no freedom of movement, no unsurveilled meetings and no-one allowed out of their homes after dusk. IPKF soldiers are everywhere, walking and riding with guns ready to shoot, standing with guns pointing at civilians, perching in mud brick towers and crouching behind sandbag barriers.

"We haven't let our children play outside for over a year. We go with them everywhere. Our children are tortured, killed, raped and kidnapped." (Voice No 3)

One result of this terror is

"Jaffna Tamils will not come out with the truth as we are scared for our lives." (Voice No 4)

One person said: "I am a lawyer and I feel ashamed. No-one is coming to help us. All are afraid. We are afraid for our lives. The churches are afraid. The intellectuals are afraid The human rights workers are afraid. We have been silenced." (Voice No 5).

In one of our meetings, held in a church, a human rights worker began to speak from the depths of his experience, and a colleague lovingly warned him.

"Be careful brother. You are important to our struggle. We need you. Please sit down. Don't say anything, even here, for which you will lose your life." (Voice No 6)

Even the Mothers' Front, which once demonstrated and fasted in order to keep the Tamil children from being tortured, conscripted to camps, imprisoned and killed, has dropped its political work. When asked why, the response was

"We no longer speak out, we can't." (Voice No 7)

## THE SILENCING OF THE SINHALESE

Psalm 6:7 **"I can hardly see, my eyes are so swollen from the weeping caused by my enemies"**

"In Colombo there are posters everywhere which could not have been posted without the agreement of the government. They say 'If you see a JVP, kill him on the spot'. 'The JVP must be impaled'" "(Voice No 8)

The terror which was once the experience of only Tamils is also the present reality for the Sinhalese. Throughout the South, the Sri Lankan army, the vigilantes, the Sinhala militants (the JVP) and other paramilitary groups continually escalate Sri Lanka terror.

"The cycle of violence increases daily. The JVP and the Government keep raising the terror level. The JVP kills new leaders, strike breakers, even cancer patients in the hospital. The security forces placed fourteen burned heads in a floral arrangement and the decapitated bodies in a circle." (Voice No 11)

"The government left a burned human head on a stake for two days as a warning to the people." (Voice No 10)

"Children are vomiting in class because they have to pass burned corpses on the way to school" (Voice No 11)

The church leaders are silent in all this because they are afraid. One Sinhala pastor said:

"My hands are stained with blood. I am guilty of murder. But if I say what I think from the pulpit, I will be killed. I saw a body floating down a river and I could not take it out of the river. I had to let it keep floating. If I took it out, I would be shot." (Voice No 12)

There are other reasons church leaders are silent:

"Many Christians are glad the JVP is getting beaten and tortured. This way class privilege is preserved. Sinhala church leaders preserve the structure. We are elitist. If we are not in power at least we cowtow to it" (Voice No 13)

"The church collaborates with the government. Priests bless the army and armaments on Army Day. How can we have anything to say when we do this." (Voice No 14)

"The church has historically been supportive of the right wing economics and politics. The church focusses on dogmatics and is silent on issues of human rights. Even if we say anything now, to the youth we are irrelevant". (Voice No 15)

## THE SILENCING OF A GENERATION

Psalm 144:12 "May our sons in their youth be like plants that grow up strong. May our daughters be like stately columns which adorn the corners of a palace."

We heard in Colombo:

"If you are Sinhalese and between 18 and 25 years old, you are suspected to be JVP and the Sri Lankan army will kill you. Our youth spend all their time running away from the Sri Lanka army". (Voice No 16)

Sinhalese young men are either in the army, the JVP, vigilante groups, running from all of the above or have left the country. Young women are continually victims of violent crimes.

In Jaffna we heard:

"There are now seven young women for every young man. There are 4000 widows in Jaffna. 1500 of these are under 25 years old. Most will never remarry. They have children to care for and have no way to do it." (Voice No 17)

"Our schools are half empty. Only girls attend. Some parents of means are also sending their girls to other countries for schooling and safety. It is really unsafe for girls here." (Voice No 19)

In a country that has two civil wars and a war of occupation taking place simultaneously there is disappearing a generation whose only voice appears to be the militant groups. And the militant groups also appear to be speaking of the aspirations of their people.

## THE SILENCING OF THE NAMING OF RACISM

Psalm 55:21 "That one's words were smoother than creams but there was hatred in that one's heart. The words were soothing as oil but they cut like sharp swords."

In Sri Lanka a great deal of energy is spent, by intellectuals, church people, conservatives and progressives, denying that racism is an issue. Some say it was once an issue but is no longer. Others say it never was an issue. Some even say:

"Racism as an issue in Sri Lanka is an invention of the Programme to Combat Racism (PCR) and the heavy Tamil lobby in the World Council of Churches (WCC)". (Voice No 20)

Aryan heritage becomes a language family rather than racial lineage. Racism is reduced to ethnic differences. Yet, through our conversations, we discovered that most Sinhala people allow that still, in the Sinhala psyche, the Tamils are innately inferior and fair skin is better than dark skin. In Tamil text books Sri-Lanka belongs to everyone. In Sinhala text books Sri Lanka belongs to the Sinhalese and the Tamils belong to India. Tamil students need higher admission scores to enter the University. The list of Sinhala affirmations of Sinhala superiority is endless. (To be continued on 12 - 01 - 90 issue.)

## மகனே நீ-மறுபடியும் பிறவாயோ?

1. பிரிவினை...... பிரிவினை...... பிரிவினை......
அன்பு வாழும் அகத்தினிலே பிரிவினை
கூடி வாழும் குடும்பத்திலே பிரிவினை
சேர்ந்து வாழும் சமூகத்திலே பிரிவினை
இணைந்து வாழும் இனத்திலே பிரிவினை
இன்புற்று வாழும் இல்லறத்திலும் பிரிவினை
பிரிவினை யகற்றி ஒருமையைக் காக்க
மகனே நீ-மறுபடியும் பிறவாயோ?

2. வேற்றுமை ..... வேற்றுமை...... வேற்றுமை......
ஆட்சி செலுத்தும் அரசியலில் வேற்றுமை
பணமீட்டும் பொருளியலில் வேற்றுமை
அறிவூட்டும் அறவியலில் வேற்றுமை
ஒளியூட்டும் பண்பியலில் வேற்றுமை
அன்பு மொழியும் சமயங்களிலும் வேற்றுமை
வேற்றுமை அகன்று ஒற்றுமை காண
மகனே நீ-மறுபடியும் பிறவாயோ!

3. தீண்டாமை...... தீண்டாமை...... தீண்டாமை......
கற்றோர் மனங்களிலே தீண்டாமை
உற்றார் குடிகளிலே தீண்டாமை
அடியார் லயங்களிலே தீண்டாமை
பாமரர் பள்ளிகளிலே தீண்டாமை
மாண்டார் மயானங்களிலும் தீண்டாமை
தீண்டாமை மாண்டிட சாதி ஒழிந்திட
மகனே நீ-மறுபடியும் பிறவாயோ!

4. போராட்டம்...... போராட்டம்...... போராட்டம்......
விவசாயி விடிவு கேட்டுப் போராட்டம்
வியாபாரி லாபம் தேடிப் போராட்டம்
பாட்டாளி கூலி கேட்டுப் போராட்டம்
முதலாளி வேலி போட்டுப் போராட்டம்
நோயாளி சுகம் நாடிப் போராட்டம்
போராட்டம் நீங்கி நீதி செழிக்க
மகனே நீ-மறுபடியும் பிறவாயோ?

5. தீவினை...... தீவினை...... தீவினை......
சீதனப் பேயால் வந்த தீவினை
மட்டற்ற மகளிர்க்கு வந்த சோதனை
பணமெனும் பசாசால் வந்த வேதனை
பாசமுள்ள பெற்றோர்க்கு வந்த சோதனை
பெண்ணவளை விலைமகளாக்க வந்த சாவினை
பெண்ணடிமை ஒழிய-கற்பு நெறி ஓங்க
மகனே நீ-மறுபடியும் பிறவாயோ?

## விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான்.

(முற்றொடர்)

தம் நண்பர்கள், தம் இல்லத்தில் கூடும்போது அவர்களோடு சேர்ந்து இறைவனைத் துதிக்கும் பாடல்களைப் பாடுவதில் லூதர் பெருமகிழ்ச்சி கொள்வார். தம்முடைய 40 வது ஆண்டிலிருந்தே அவர் உடல் நலக் குறைவுகளால் பெரிதும் பாதிக்கப் படலானர். ஓயாத உழைப்பும், கண் விழிப்பும், உபவாசங்களும், வறுமைச் சூழ்நிலையும் அதற்குக் காரணமாய் அமைந்தன. மலச்சிக்கல், நரம்புத் தளர்ச்சி, இரத்தக் கொதிப்பு போன்றவை அவரைப் பெரிதும் வாட்டின. குறிப்பாக 1523 ஆம் ஆண்டிலிருந்து அவருக்கு ஏற்பட்டு வந்த தலையிடிகள், பல வேளைகளில் அவரை, எந்த வேலையும் செய்ய இயலாத நிலையில் ஆக்கிவிடுவதுண்டு.

தம்முடைய வயதைக் காட்டிலும் அதிகமான முதுமைத் தோற்றம் அவரில் காணப்பட்டது. தம்முடைய 61 ஆம் பிறந்த நாளை 1545 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் நாளன்று கொண்டாடினர். அதுவே அவருடைய கடைசிப் பிறந்த நாளாக அமைந்தது. அதற்கு அடுத்த நாள் அவர் தம்முடைய இறுதி உரையை, பல்கலைக்கழகத்தில் ஆற்றினர். அது ஆதியாகமம் பற்றிய விளக்க உரையாக இருந்தது. இவ்வுரையை முடித்த பின்னர், 'ஆதியாகமம் பற்றிய என்னுடைய விரிவுரை இத்துடன் முடிவடைகிறது. எனக்குப் பின் மற்றவர்கள் அதை நன்கு விளக்க ஆண்டவர் அருள் செய்ய வேண்டும், இதனைத் தொடர முடியாத நிலையில் பலவீனப்பட்டிருக்கிறேன். என்னுடைய உடல் நலத்துக்காகச் செபியுங்கள் என்று தம் மாணவர்களிடம் கூறினர்.

தம் நண்பர்களிடம் பேசிக் கொண்டிருந்தபோது, 'பாப்பரசர்களும், பிசாசுகளும், மன்னர்களும், பிரபுக்களும் எத்தனையோ இன்னல்களை எனக்குச் செய்திருந்தாலும், இது வரை உயிரோடிருக்கிறேன். இந்த உலகம் என்னை வெறுத்தது போல, கடந்த 200 ஆண்டு காலத்தில் வேறு எவரையும் வெறுத்து ஒதுக்கியது கிடையாது...என்று கூறினர். இதன் பின் பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி தம்முடைய இறுதி அருளுரையை

''பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை ஞானிகளுக்கும், கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மைத் தோத்திரிக்கிறேன்''

(மத் 11:25) என்ற வசனத்தின் பேரில் ஆற்றித் திருவிருந்து ஆராதனையை நடத்தி முடித்து, இரண்டு பேருக்கு அருட்பொழிவு வழங்கினர். அன்று, அவர் செய்த கடைசிச்செபம் பின்வருமாறு அமைந்தது. ''ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் தந்தையாம் இறைவனே, நீர் உம்முடைய திருமைந்தனை எனக்கு வெளிப்படுத்தியதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன். அவரிடத்தில் நான் விசுவாசம் வைத்து அவரையே நேசித்து, அவரையே பிரசங்கித்து, அவரையே அறிக்கையிட்டு ஆராதித்து வருகிறேன்....ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, என் ஆத்மாவை உம்மிடம் ஒப்படைக்கிறேன். பரம தந்தையே, நான் இந்த வாழ்க்கையிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டாலும், உம்மோடு என்றென்றும் வாழ்வேன்'', என்பதே.

பின்னர், யோவான் 3:16 ஆம் வசனத்தை அவர் கூறி முடித்ததும் அவர் ஆவி பிரிந்தது. பெப்ரவரி 19 ஆம் நாளன்று ஐஸ்லீபனில் உள்ள புனித அந்திரேயா ஆலயத்தில் சிறப்பு ஆராதனை நடந்தேறிய பின்னர் அவருடைய உடல், விட்டன்பர்க் நகரத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு பெப்ரவரி 22 ஆம் நாளன்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

இருபத்தொன்பது ஆண்டுகளுக்கு முன்பு லூதர், தம்முடைய 95 குறிப்புக்களைக் கொண்ட பிரகடனத்தை ஆணிகளால் அடித்து நாட்டிய அதே பேராலயத்தில்தான் அவருக்கு நல்லடக்க ஆராதனை நடத்தப்பட்டது.

(முற்றும்)

## அமரர் அருள்திரு. S.R. ஹிச்கொக் அவர்கள்

(முற்றொடர்)

போதகர் அவர்களின் நற்பண்புகள் குறிப்பிடத்தக்கவை. தற்புகழ்ச்சியற்றவர். தன் திறமைகள் பற்றிப் பறைசாற்றாதவர். தன்னை மறைத்து, கிறிஸ்துவை முன்னுக்குக் காட்டியவர். மற்றவர்கள் தன்னைப் பற்றிப் புகழ்வதையும் விரும்பாதவர். ஒரு தந்தைபோல் தன் சபையாருக்குப் புத்தி புகட்டுவார். குழந்தைபோன்ற கள்ளங்கபடற்ற மனமுடையவர். நேர்மையும், வஞ்சகமுமற்ற பண்பாளன். அமைதியும் அடக்கமுமான வாழ்க்கையை வாழ்ந்தவர். பிறர் மனம் புண்படப் பேசமாட்டார், நடக்கவுமாட்டார். 'இவர் மிதித்த இடத்துப் புல் சாகாது'. இப்பண்புகளுடன், தன் சிறுவயது தொடங்கி வளர்ந்தவர். இது, அவரது குடும்பப் பரம்பரைச் சொத்து. 'நட்பும், தயையும், வள்ளன்மையும்' ஒருவருடன் சேர்ந்து பிறந்தவை, என்ற பெரியோர் வாக்கு, பொய்யல்ல.

இவர், தாராள மணப்பான்மை உடையவராய் இருந்ததுபோல், இவரது குடும்பப் பெருக்கமும் தாராளமாய் அமைந்தது. பிள்ளைகளும் நற்சால்பும், நற்பண்பும் உடையவர்களாய் வளர்க்கப்பட்டனர். 'தக்கார், தகவிலார் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்'. தாம் எடுத்த காரியத்தைத் தளராது தொடுத்து நிறைவேற்றும் ஆற்றல் படைத்தவர். தகவிலாரையும் தக்கவராக ஆக்கி விடுவதில் சிறந்தவர். உடுப்பிட்டித் திருச்சபையில் எல்லோரையும் தளரவிடாது, அன்புடன் அணைத்துச் சபைக் கருமங்களை நிறைவேற்றிய தீரன். இவர் 1924 ஆம், 25 ஆம் ஆண்டுகளில் பாழடைந்த நிலையிலிருந்த உடுப்பிட்டித் தேவாலயத்தைப் பெருமுயற்சிகள் எடுத்துத் திருத்தினார். இந்தத் திருத்த வேலைகளைச் செய்வதற்காக மலாயா, சிங்கப்பூர் ஆகிய இடங்களுக்குச் சென்று, நிதி திரட்டி வந்து, தான் எடுத்த கருமத்தை நிறைவேற்றிய செயல்வீரன்.

எனது வாழ்க்கையில் நான் முன்னேறப் பேருதவியாயிருந்து என்னை ஊக்கப்படுத்தியவர் கனம் ஹிச்கொக் போதகர் அவர்களே. அவர், என் வாழ்விலே தலையிட்டிராவிடில் நான் இந்த நிலைக்கு வந்திருக்க முடியாது. என் சிறுவயதிலேயே என்னை உரியமுறையில் வழிநடத்தியவர். எனது படிப்பில் கரிசனையெடுத்து, நன்கு படிக்கச் செய்தார். யாழ்ப்பாணக் கல்லூரியிற் சேர்ந்து படிப்பதற்கு வழி வகுத்தவர்.

''எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்றமகற்கு'' என்றார் வள்ளுவனார். ஆகவே, எனது ஆசானை, ஆன்மீகத்தந்தையை நன்றியறிதலோடு நினைவு கூருகிறேன். அவரைப் பற்றிக் கூற இவ்வாய்ப்புக் கிடைத்தமைக்காக நன்றி. நன்றிக் கடப்பாட்டிற்காக இங்கு நான் இல்லாததை உள்ளதுபோல் கூறவில்லை. புனைந்துரைக்கவில்லை. நான் கண்டுங்கேட்டும் என் வாழ்வில் அனுபவித்தனவற்றை அப்படியே கூறியுள்ளேன். கனம் ஹிச்கொக் போன்ற நற்பண்பு வாய்ந்த குருமார் பலர் நம்மத்தியில் தோன்ற வேண்டுமென்று கடவுளை வேண்டுகின்றேன்.

---

திருமதி ஹிச்கொக் அம்மையார், அன்பும் ஆதரவுமான ஒரு போதகர் அம்மாவாக இருந்தார். அவர் சாந்த குணமும் தயாள சிந்தையும் உடையவராய், தற்பெருமையற்றவராய் தன் கணவனின் பணிகளில் உறுதுணையாயிருந்தவர். தனது பிள்ளைகளுடைய வளர்ச்சியிலும் கண்ணுங் கருத்துமாயிருந்து நல்வழியில் வழி நடத்தினார். சபையாருடன் அன்புடன் பேசி ஆதரவுடன் உபசரித்துத் தேவையுற்ற இடங்களில் வேண்டிய உதவிகளைச் செய்துவந்தார். இயேசு பெருமான், தாலந்துகள் உவமையைக் கூறிமுடித்தபின் கூறியது மத்தேயு 23:31-40 ஆம் வசனத்தில் காணப்படுகிறது. ''மனிதகுமாரன் தமது மகிமை பொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங் கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தில் வீற்றிருப்பார். சகல மக்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். சிலரைத் தமது வலது பக்கத்திலும் சிலரை இடது பக்கத்திலும் நிறுத்துவார். தமது வலது பக்கத்தில் நிற்போரைப் பார்த்து, ''வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே... நான் பசியாயிருந்தேன் எனக்கு உணவு கொடுத்தீர்கள், தாகமாயிருந்தேன் என் தாகத்தைத் தீர்த்தீர்கள். அந்நியனாயிருந்தேன் என்னைச் சேர்த்துக் கொண்டீர்கள். உடையற்றிருந்தேன் எனக்கு உடுத்துவிட்டீர்கள், வியாதியாயிருந்தேன் என்னை விசாரிக்க வந்தீர்கள். காவலிலிருந்தேன் என்னைப் பார்க்க வந்தீர்கள.........'' என்று கூறிய பின், அவர் தொடர்ந்து ''மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்'' என்றார்.— இந்த வசனங்கள் கனம் ஹிச்கொக் போதகருக்கும் போதகர் அம்மாவுக்கும் நன்கு பொருத்தமானது. அவர்கள் தங்கள் சபை வாழ்க்கையில் இவ் வசனத்தின்படி நடந்தார்கள். இப்பெரியாரின் ஆன்மா சாந்தியடையட்டும். இவர்களுக்காக ஏறெடுக்கப்படும் நன்றித் தோத்திரங்கள் இறைவனுக்கு உகந்தனவாயிருப்பதாக.

## சீனவில்

நூறு வயதைத் தாண்டியவர்கள் 3,851 பேர் சீனவில் உள்ளதாக சீனவின் 'மக்கள் தினசரி' கடந்த வாரம் வெளியிட்டுள்ள செய்தியொன்றில் தெரிவித்துள்ளது.

இவர்களில் 70 வீதமானவர்கள் பெண்கள் எனவும் கிராமப் பகுதிகளில் வசிப்போரே பெரும்பாலும் நூறு வயதைத் தாண்டியவர்கள் என்வும் இச் செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடின சரீர உழைப்பு, மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கை, திட்டமிட்ட சரியான உணவுமுறை ஆகியனவே தமது நீடித்த வாழ்க்கையின் ரகஸியம் என அவர்கள தெரிவித்தனர்.

# உதய தாரகை

UTHAYATHARAKAI

Estd. 1841.

மலர் 150 05 - 01 - 1990 இதழ் 01


## சிந்தனை 45.

ஏசாயா 6:8—10

சுயாதீனமும் சுதந்திரமும் வேண்டும் என்று மனிதன் விரும்பி விலங்கினங்களையும் இயற்கையையும் ஏன் சுயாதீனம் விரும்பும் தன் இனத்தையும் அழித்துப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லுகின்றான். இவனுடைய பயணத்தின் பின் விளைவுகள் சுயாதீனத்திற்கும் சுதந்திரத்திற்கும் சேதத்தையே உண்டுபண்ணும் என்பதை இந்த மனிதன் உணருவதே இல்லை. இவ்வுணர்வு இம்மனிதனைச் சந்திக்காதவரை இவனுடைய பயணம் முற்றுப் பெறும் வாய்ப்பும் இல்லை.

இறைவன், தன் மக்களைத் தன்மக்களாக்கும் வழிப்பயணத்தில் மக்களைத் தன்பணிக் கென்று பயன் படுத்தும் போது மனித சுயாதீனத்தை மதிக்கும் குண இயல்புடையவராகவே காணப்படுகின்றார். இவ்வுண்மை விவிலியத்தில் இழையோடிக் கொண்டே இருக்கின்றது.

ஏசாயாவுடைய அழைப்பில், சுயாதீனத்தை மதிக்கும் இறைவனுடைய இயல்பூக்கம் வெளிக்காட்டப்படுகின்றது. இறைவன், தன் தரிசனத்தையும் அறிவையும் தந்து ஏசாயாவிற்குச் சுத்திகரிப்பையும் செய்துவைத்தபின் பணிக்காகிய அழைப்பு விடுத்ததை ஏசாயா 6:8 ஆம் வசனம் கூறுகின்றது.

இறைவனுடைய செயற்பாடு நல்ல தந்தையின் செயற்பாட்டுக்கு ஒத்திருக்கின்றது என்று கூறுவது பொருந்தும். தந்தை, தன்னை, தன் பிள்ளைக்கு வெளிப்படுத்திக் கொண்டே இருப்பவன். தன் அறிவைப் பிள்ளை பெற்றுச் சிறப்புற வாழவேண்டும் என்று விரும்பி அறிவைக் கொடுப்பதில் ஆர்வமுடையவன். தன்பிள்ளை ஒழுக்க சீலனாக இருப்பதை விரும்பி, தீமைக்கு விலக்கித் தன்பிள்ளையை வளர்ப்பது இவன் உயர்வான சிந்தை.

பிள்ளை சரியாக வளர்ந்து நன்மை தீமையைப் பிரித்தறியும் பக்குவ நிலை அடைந்ததும் பிள்ளையிடத்தில் தன் நோக்கம் என்ன என்று கூறுவான். இனிபிள்ளை தன்னை ஆராய்ந்து முடிவு சொல்லவேண்டும். முடிவு அப்பாவுக்கு விரோதமாக இருந்தாலும் நல்ல அப்பா குழம்பிப்போக மாட்டார். காரணம் அப்பா செலவு செய்தவைகள் எல்லாம் பிள்ளைக்காகவே செலவு செய்தார். அப்பாவுடைய பிரயாசம் பிள்ளையில் என்றும் வீண் போகாது என்று அப்பா அறிவார். பிள்ளைகளுடைய சுயாதீனத்தை மதிக்கும் அப்பாவை எப்போதும் பிள்ளைகளும் மதிப்பார்கள்.

மனிதன் நோக்கத்தை வெளிப்படுத்திய பின் தன் பணியின் தொடர்ச்சிக் கென்று பிறிதொரு மனிதனை ஆயத்தம் செய்வான். ஆயத்தம் எல்லாம் முடிந்தபின் நோக்கத்தை வெளிப்படுத்தமாட்டான். நோக்கத்திற்கு மாறாக ஆயத்தம் செய்யப்பட்டவன் விலகி விட்டால், பட்ட பிரயாசமும் இட்ட செலவும் வீண்போய்விடுமே என்ற பயம்.

எப்பணியை எம்மனிதன் ஏற்பினும் அவன் அப்பணியை விரும்பி ஏற்கவேண்டும். அவனுடைய விருப்பிற்கு மாறாக அவனிடம் திணிக்கக் கூடாது. திணித்தால் விளைவுகள் விபரீதமாகவே முடியும் என்பதை இறைவன் அறிவார். இவ்வறிவை நிறைவு செய்யும் இடம்தான் ஏசாயா 6:8 வசனம்.

இறைவனுடைய கேள்விக்குத் தரிசனத்தையும், அறிவையும், சுத்திகரிப்பையும் பெற்ற ஏசாயா, தந்தைக்கு மகன் சொல்லுவது போலப் பதில் தந்தான். சிறிதும் சலனப்படாதவனாகப்பதில் தந்து நின்ற ஏசாயாவிற்கு, பணியின் திட்டமும் தரப்படுகின்றது. ஏசாயா 6:9—10.

இன்று மனித வரலாறு இறைவனுடைய காட்சியைக் காணவேண்டும். இறைவனுடைய அறிவைப் பெறவேண்டும். இறைவனால் சுத்திகரிக்கப்படவேண்டும். இம்மூன்றும் முப்புரிகள் என்று இறைவன் கி.மு. எட்டாம் நூற்றாண்டின் சரித்திர-சமூக-அரசியல்-பொருளாதார வாழ்வில் கண்டதாலேயே ஏசாயாவுக்கு இம்மூன்றின் முக்கியத்துவத்தையும் தந்து அவனைத் தன் பணிக்கென்று ஆயத்தப்படுத்தினார்.

இறைவனுடைய தரிசனமும் அறிவும் சுத்திகரிப்பும் இல்லாத பணி அசைவுகளையோ அதிர்வுகளையோ ஏற்படுத்தமாட்டா.

மனித சுயாதீனத்திற்கு மாறாகச் செயல்படும் எந்தச் செயலும் சேதமான செயற்பாடுகளையே உருவாக்கும் மனித சுயாதீனம் மதிக்கப்படும் போது சிறப்பான பணியும் மலரும், சிந்தையையும் நிறைக்கும். சீரிய சமூகமும் அரசும் வளரும் இறைவனே மனித சுயாதீனத்தை-சுதந்திரத்தை மதிக்கின்றார் என்றால் ஏன் இந்த மனித சமூகம் தனி மனித சுயாதீனத்தை மிதிக்கின்றது.

ஆ. வே. இயேசுதாசன்.

## செய்திகள்:

### 9 கோடி

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் கல்வி வளர்ச்சிக்கும், இளைஞர்களின் புனர் வாழ்வுக்குமென கனடிய அரசின் உலக பல்கலைக்கழக சேவை 9 கோடி ரூபாவை வழங்கி இருக்கின்றது.

இந்த 9 கோடி ரூபாவில் 5 கோடி 50 லட்சம் ரூபாவை இலங்கைக்கான கனேடிய உணவு, உதவி மற்றும் பொருளுதவித் திட்டங்களின் கீழ் கிடைக்கும் பொருட்களை விற்பனை செய்வதின்மூலம் இலங்கையரசு பெற்றுக்கொள்ளவுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் இனக்கலவரம் காரணமாக இடம் பெயர்ந்த 20 ஆயிரம் மக்களுக்கு நிவாரணம் அளிக்கப்படவுள்ளது இத் திட்டத்தின் கீழ் தொழில் பயிற்சி ஆரம்பிக்கவும், தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கவும் உதவிகள் வழங்கப் பட்டுள்ளன

இவ்வுடன்படிக்கையில் இலங்கை அரசும், கனேடிய அரசும் கைச்சாத்திட்டுள்ளன.

### அடிக்கல் நாட்டுதல்:-

10 ஆண்டுகளாகக் கட்டி முடிக்காதிருந்த காரைநகர்த் தென்னிந்தியத் திருச்சபையின் திறந்த வெளி அரங்கம் திருவாளர். தோ. டானியேல் அவர்களின் மனமுவந்த கொடைகளினால் ஓர் புது வடிவைப் பெறுகிறது என்று 12.11.89 அதாவது ஞாயிறு காலை ஆராதனையின் பின்னர் நடந்த அடிக்கல் நாட்டு வைபவத்தில் அடிக்கல் இட்டு உரையாற்றிய முதிர் அங்கத்தவர் V. அம்பலம் அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் இப்படிப்பட்ட பரந்த மனப்பான்மை கொண்டவர்களால் தான் எமது திருச்சபையின் சிறுவர் பாடசாலையும் சுற்றுமதிலும் கட்டி முடிக்கப் பட்டுள்ளது என்று தெரிவித்தார். இவ்வரங்கத்திற்கு வில்லியம் கேரி என்ற நாமத்தைச் சூடும்படி திருவாளர் டானியேல் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

திறந்த வெளி அரங்கும் அதனுடன் இணைந்து ஓர் சிறுவர் வாசிகசாலையும் அமைத்துத் தருவதற்கு முன்வந்த திருவாளர். தோ. டானியேல் அவர்களிற்கு நன்றி தெரிவித்த சபை ஊழியன் இம்மைந்தனை நமக்கீந்த தந்தையவர்கட்குத் தான், நாம் நன்றி தெரிவிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார். இக்கட்டிட வேலை 1990-ம் ஆண்டு தை மாத இறுதிக்குள் முடிவடையும் எனத் தெரிவித்தார்.

### பரிசளிப்பு விழா:-

காரைநகர்த் தென்னிந்தியத் திருச்சபையின் பாலர் பாடசாலையின் 8 ஆவது வருடாந்தப்பரிசளிப்புவிழா 16.12.89 சனிக்கிழமை மாலை 2.00 மணிக்கு சபைக்குரு அருள்திரு. ஆ. வே. யேசுதாசன் தலைமையில் நடைபெற்றது. ஓய்வுபெற்ற கொத்தணி அதிபர் திரு. கே. கே. நடராஜா பிரதம விருந்தினராகவும் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் திரு. அ. கமலாகரன் அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டார். பாலர் கலை நிகழ்ச்சிகளும் வினோத உடைப் போட்டியும் பார்வையாளரை மெய் சிலிர்க்க வைத்தது. சிறுவர் பாடசாலை நிர்வாகி திருவாளர் D. அல்பிரட் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

### கிறிஸ்மஸ் விழா. பெண்கள் நிலையம்....

சென்ற 20-12-89 புதன்கிழமை காலை 9.30 க்கு, மருதனுமடப் பெண்கள் நிலையத்தில் மனதைக் கவர்ந்த கிறிஸ்மஸ் விழா பிள்ளைகளால் நடாத்தப்பட்டது.

அலாரிப்பு நடனத்துடன் விழா ஆரம்பமானது. பின் மாணவிகளின் நல்ல நடன நிகழ்ச்சிகளும், சிறுமிகளின் அபிநயப் பாடல்களும் கோலாட்ட நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. பாலகன் இயேசுவை, பண்ணோடு பாடினர். அபிநயங்களுடன் ஆடினர். இன்னிசை வாத்தியங்களால் வாழ்த்தினர். ஆண்டவர் அப்பிள்ளைகளுக்குக் கொடுத்த அளவற்ற தாலந்துகளால் போற்றினர்.

நத்தார் பப்பா, கல்வித்துறையிலும் ஏனைய கைப்பணி வேலைகளிலும் திறமை பெற்ற பெண்பிள்ளைகளுக்கு, பரிசில்களை வழங்கினர். எமது பேராயரும், பிள்ளைகளுக்குரிய பரிசில்களை வழங்கி மகிழ்வித்தார். திருமதி S. சோமசுந்தரம் தனது நன்றிகளை எல்லோருக்கும் கூறினார். பெண்கள் நிலையப் பொறுப்பாளர்களும், ஆசிரியர்களும், பிள்ளைகளும் மிக உற்சாகமாக இவ்விழாவை நடாத்தியமை பாராட்டுதலுக்குரியது. இறுதியில் இனிய தேநீர் விருந்தினைக் கொடுத்து இவ்விழாவைச் சுவையுடன் நிறைவேற்றினர்.

### இறையியல் கல்லூரியின்....

21-12-1989 வியாழன் காலை 9 மணிக்கு பெரியண்ணனின் மண்டபம் அமைந்திருக்கும் மருதனுமட ஆச்சிரமத்தில் ''சமாதானம் அளிக்கும் இறைவன்'' என்ற தலைப்பில் ஓர் இதயம் கவர்ந்த இன்னிசை ஆராதனை இடம் பெற்றது. சிறுவர்களும், வாலிபர்களும், பெரியோர்களும் மண்டபத்தை நிறைத்திருந்தனர். வணக்க ஆராதனையுடன் நிகழ்ச்சி ஆரம்பமானது.

கல்லுங்கனியும் கவிதைகள் பொழிந்தன. இதயங்களை இளகச் செய்யும் வண்ணம் இறையியல் கல்லூரி மாணவர்கள் இன்னிசைகள் இசைத்தனர், வாத்தியங்கள் இசைத்தன. ''வருகிறார் சமாதானப் பிரபு'' ''வருக சமாதானப் பிரபுவே'' ''மகனே நீ-மறுபடியும் பிறவாயோ?'' ''சமுதாயத்தின் சமாதானப் பிரபு'' என்ற தலையங்கங்களில் குழந்தை இயேசுவை, கருத்துள்ள கவிதைகளால் அன்புடன் அழைத்தனர். இன்று நமது சமுதாயத்தில் இடம் பெறும் பிரச்சனைகளையும் மக்கள் விடும் கண்ணீர்த் துளிகளையும் - இக்கவிதைகள் எடுத்து இயம்பின. இப்பிரச்சனைகளையெல்லாம் தீர்த்து வைக்கும்படி பாலகன் இயேசு-சமாதானப் பிரபு அழைக்கப்பட்டார்.

அருள்திரு. A. W. ஜெபநேசன் இறைசெய்தியை மிகச் சுருக்கமாகவும் நயமாகவும் எடுத்துக் கூறினார். அவர் தனது செய்தியில் இயேசு பிறந்த காலத்திலும் இதே நிலை இருந்ததாகவும் பெத்லகேமில் குழப்பம்—றோம அரசுக்கு எதிராக செலுக்ஸ் போராட்டம் என்பன அக்காலச்சூழ்நிலை என்றும்-அப்பிரச்சனைகள மத்தியில் தான் பாலகன் பிறந்தார் என்றும் குறிப்பிட்டார். நாமும் பல பிரச்சனைகள் இடம் பெற்றாலும் எமது பாலகன் பிறப்பைப் பாடல்களாலும், நற்செய்திகளாலும் புகழ்ந்து போற்றுதல் நன்று என்றும் குறிப்பிட்டார்.

இறுதியில் ஆசீர்வாதத்துடன் இன்னிசை விழா இனிது நிறைவேறியது. இரண்டு மணித்தியாலங்கள் தமது இனிய பாடல்களாலும், உள்ளத்தைத் தொடும் கவிதைகளாலும் யாவரதும் இதயக் கதவுகளை இயேசு பாலகனுக்காகத் திறந்த இறையியல் மாணவர்களின் திறமைகளையும், உற்சாகத்தையும் பாராட்டாமல் இருக்க முடியுமா? விழாவைத் தமது இனிய தேநீர் விருந்துடன் இனிது நிறைவேற்றினர்.

### அடிச்சட்டங்கள்

மேற்கு ஜெர்மனியிடம் இருந்து இ.போ.ச. 67 பென்ஸ் பஸ் அடிச்சட்டங்களை இவ்வாண்டு இறுதிக்குள் பெற்றுக் கொள்ளவிருப்பதாக போக்குவரத்து அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஜெர்மன் சமூக நலத் திட்டத்தின் கீழ் மேற்படி வண்டிச் சட்டங்கள் இலங்கைக்கு வழங்கப்படவுள்ளன.

இதேவேளை நாடு பூராவிலுமான போக்குவரத்துச் சேவைகளை சீராக நடத்துவதற்கான திட்டத்தைப் போக்குவரத்து அமைச்சு மேற்கொண்டுள்ளது. இதன்படி தற்போது உதிரிப்பாகங்களின்றி டிப்போக்களில் தேங்கிக் கிடக்கும் பஸ்களைத் திருத்துவதற்கென ஜப்பான், இந்தியா, இங்கிலாந்து, ஜெர்மன் முதலிய நாடுகளிலிருந்து உதிரிப் பாகங்களை கொண்டுவருவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளனவ.

### அன்பளிப்பு

இந்திய கைத்தொழில் அமைச்சினால் கொழும்பில் கையளிக்கப்பட்ட ''ரெட்ஞேபியர்'' கைத்தொழில் இயந்திரங்களின் 4 மில்லியன் ரூபா பெறுமதியான இயந்திரத் தொகுதியை, கைத்தொழில் அமைச்சினூடாக வடக்கு-கிழக்கு மாகாண இளைஞர் விவகார அமைச்சு பெற்றுக் கொண்டதாக அமைச்சர் திரு ஜோர்ஜ் செனிவிரத்ன தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், சிறு கைத்தொழில் பொருட்களை உற்பத்தி செய்யக் கூடியதான இந்த இயந்திரத் தொகுதி மூலம் 150 இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து தொழில் வாய்ப்பு வழங்க முடியுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## தாரகை ஒளி:

அகங்கார இடும்பனுக்குப் பரியாசன் எனப்பேர்;
அகந்தைச் சினத்தொடு அவன் நடை நடப்பான்.

— நீதிமொழிகள்- 21: 24 —

## எங்கள் கருத்து

# சமாதானத்தின் ஆண்டு 1990.

இருபதாம் நூற்றாண்டின் இறுதிச் சகாப்தத்தின் ஆரம்பத்தில் வந்துள்ளோம். எனவே இவ்வாண்டு அதிசிறப்புள்ள ஆண்டு. இதனைச் சமாதானத்தின் ஆண்டாக நமது ஜனாதிபதி பிரகடனப்படுத்தியுள்ளார். யாழ். பேராயத்திலுள்ள சபைகளும் இவ்வாண்டை அருட்பணியின் ஆண்டாகக் (Year of Misson & Evangelism) கணித்து, இவ்வாண்டில் சமாதானத்திற்குரிய பணிகளில் கருத்துடன் ஈடுபடுவது, நம் சபைகளின் வளர்ச்சிக்கு மட்டுமல்ல, நாட்டின் முன்னேற்றத்திற்கும் அதிக பயனளிக்கும்.

பாப்பரசர் தன் புத்தாண்டுச் செய்தியில், ஆயுதப் போட்டியினாலும், சமயப் பிளவுகளினாலும், நாடுகள் நடுவில் ஏற்பட்டு வரும் தொடர்ச்சியான அநீதிகளினாலும் மட்டுமன்றி, இயற்கை வளங்களைச் சூறையாடுவதனாலுங்கூட, உலக சமாதானத்திற்கு ஆபத்து ஏற்படுகிறதெனக் கூறியுள்ளதை, இந் நாட்டின் தலைவர்கள் கவனிக்க வேண்டியது அவசியம். இவ்வுலகில் படைக்கப்பட்ட அனைத்தும், எல்லா மக்களுக்கும் சொந்தமானது என்பதே கடவுளின் நியதி. ஆனால் இன்று, ஒரு சிலர் மட்டும் தங்கள் பலத்தைப் பாவித்து, அனைவர்க்குஞ் சேரவேண்டிய இயற்கை வளங்களைத் தம் வசம் குவித்துக் கொண்டிருக்கின்றனர். இதனால் சமுதாயங்களில் ஏற்றத் தாழ்வும், மக்கள் நடுவில் சமாதானமற்ற நிலைமையும் தோன்றியுள்ளன.

இறைவனின் நீதிக்கு எதிராக ஒரு சிலரின் சுயநலத்தால் விளையும் தீய செயல்கள், சமுதாயத்தில் காணப்படும் தாழ்வுகள், பாரபட்சங்கள், ஆசைகள், பொறாமை ஆகியன, நாட்டில் சமாதானத்தை நிலைக்க விடாமல் சீர்குலைத்து விடுகிறதென்பதை நாம் அறிவோம். இறைவன் தன்னைப் படைத்ததின் நோக்கத்தை உணராமல், மனிதன், அவருடைய சித்தத்திற்கு மாறாக அன்று தொட்டு இன்று வரை செயல்பட்டு வருவதால், சமுதாயம் சீர்குலைந்து விட்டது. தான் ஏற்படுத்திய இச் சிக்கலிலிருந்து மனிதன் தன்னை விடுவிக்க முடியாது தவிக்கின்றான். இக்கட்டத்தில்தான், சமயப்பணிகளுக்குப் பெருந்தேவையுண்டு. கிறிஸ்தவ சமயம் மட்டுமல்ல, இந் நாட்டிலுள்ள ஏனைய சமயங்களும் சமாதானத்திற்குரிய நற் பணிகளை இவ்வாண்டு தொடக்கம் செய்து வருதல் வேண்டும். எங்கெங்கே எவ்வித வேறுபாடின்றி ஒருங்கிணைந்து செயற்பட வேண்டுமோ, அதனையறிந்து ஒன்றுபட்டுச் செயற்பட, சமயத் தலைவர்கள் முன்வருதல் வேண்டும்.

இறைவனுடன் மனிதன் சமாதானமாக வாழா விட்டால், பூமியில் சமாதானம் ஏற்பட முடியாது. உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் அரசியல் வாதிகளும், சமய வாதிகளும், இதுவரை இந் நாடு சமாதானமின்றி அனுபவித்த துன்பங்களை உணர்ந்து, இதய சுத்தியுடன் செயல்பட முடிவு செய்தல் அவசியம். சமாதானத்தின் வேந்தனாகிய கிறிஸ்தேசு பிரான் இவ்வாண்டில் நமக்கு விடுக்கும் அழைப்பிதுவே. அவருடைய அழைப்பையேற்று, அவரின் போதனைக்குச் செவிமடுத்து, அதன்படி செயற்படச் சபையாரை வழி நடத்துவது குருமாரின் கடமை.

கடந்த ஆண்டின் இறுதியில், கடவுளின் அருளால் வல்லரசுகளுக்கிடையே, உலக சமாதானத்திற்குரிய நல்ல தன்மைகள் தோன்றியுள்ளன. கடவுள், சோவியத் நாட்டின் தலைவர் மிகையில் கொர்பச்சேவை, உலக சமாதானத்திற்காகப் பயன்படுத்தி வருவதை நாம் காண்கிறோம். இதனை மேல் நாட்டரசுகளும் உணர்கின்றன. கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டு வரும் நல்ல மாற்றங்கள், நமக்கு ஒரு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளன.

இந் நாட்களில், கடவுள் செய்து கொண்டு வரும் சமாதானத்திற்குரிய நற்பணிகளில், கிறிஸ்தவர்களாகிய நாம் பங்கெடுக்க வேண்டும். நாம் ஒவ்வொருவரும் நமது கடமைகளை சுயநலமின்றி சமாதானம் நிலவ வேண்டுமென்ற ஒரே நோக்குடன் செய்தல் வேண்டும். இவ்வாண்டு தொடக்கம், சமாதானத்திற்குரிய அருட் பணிகளில் நமது சபைகள் ஈடுபட. ஏற்ற ஒழுங்குகளை முறைப்படி வகுத்து, கருத்துடன் செயலாற்றுங்கள்.

சிறுகதை.

## "24-ம் தேதி நடுச்சாமம் 12 மணி...."

கிரிவத்த,
இரத்தினபுரி.

கிறிஸ்ரினா,

''உங்களுக்காகவே காத்திருக்கிறேன். உடனடியாக வாருங்கள்', என்றெல்லாம் எழுதியிருந்தாய். உன் நிலை எனக்குப் புரிகிறது இருந்தாலும் உடனடியாக உவ்விடம் வரமுடியாத நிலையிலிருக்கிறேன் என்பதை உனக்குப் புரியவைக்கத்தான் வேண்டும். அன்று, உன்னிடம் கூறியதுபோல, என் கிராமத்துக்கான கல்விப்பணியில் இறங்கிவிட்டேன். நல்ல முறையில் அதை ஆற்றியும் வருகிறேன். அதனால் இங்குள்ள பல சிறுவர்கள், இளைஞர்கள், முதியவர்கள் ஆகியோரின் அறிவுப்பசி ஓரளவு தீர்க்கப்படுகிறது. இன்னுமொன்று......,

இங்குள்ள பலருக்கு இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறவே தெரியாது. ஆனால் இப்போது, கிறிஸ்துவை ஏற்று, அதன் வழி நடக்கவும் ஆரம்பித்துவிட்டார்கள். தங்களுடைய பாவங்களைப் போக்கி, தங்களைப் புனிதர்களாக்குகின்ற இரட்சகராய் இயேசு இருக்கிறார் என்று சொல்வதிலே அவர்களுக்கொரு தனி அலாதி, ஒரு பெருமை. உண்மையும் அதுதான். பொய் பேசுவதும், கோள் சொல்வதும், தெருவலைவதும், வம்பளப்பதும், களவெடுப்பதும், வலியராயிருப்பவர்கள் மெலியராயிருப்பவர்களை வாட்டி வதைப்பதுமாயிருந்த பலர், இன்று திருந்திவிட்டார்கள். எஞ்சியிருப்பவர்களை நல்லவர்களாக்குவதில், தீவிரமான பங்கும் ஏற்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம், கல்வியில் இப்போது அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஆர்வம்தான். எல்லாம் நல்லபடியாக அமைய வேண்டும் என்று இறைவனையும், யேசுவையும் வேண்டுகின்ற அதே வேளையில், அந்நிலை வளர்வதற்கான அனைத்து முயற்சிகளையும், தவறாமல், கடைப்பிடித்தும் வருகிறேன்.

கல்வியிலும் பண்பிலும் பின்தங்கிய கிராமமான இந்தக் கிரிவத்தக் கிராமம், கல்விப் பெருக்கினாலே சிறந்து, செழித்துப் பண்பாட்டு நிலமாக மாறும்வரை, எனது பணி, ஓயாத அலையாகவே இருக்கும் என்ற உண்மையை இந்தச் சந்தர்ப்பத்தில், உன்னிடம் கூறாமலிருக்கவும் என்னால் முடியவில்லை. என்னுடைய இந்த நிலையில் எடுத்த முயற்சியைப் பாதியில் முடித்துவிட்டு, உன்னிடம் வருவது சாத்தியமா என்பதை நீயே அலசிப்பார்.

உன் பெற்றோர் உனக்குத் திருமணம் பேசுகிறார்கள் என்று நீ எழுதியதைப்பற்றி, எனது பெற்றோரோடு கலந்து ஆலோசித்தேன் எடுத்தவுடன் 'ஆம்' என்று சொல்லுமளவுக்கு அவர்கள் வளரவில்லை. படிப்படியாய்த்தான் அவர்களை மாற்ற வேண்டும். நீ என்னைத் திருமணம் செய்வதை உனது பெற்றோரும் விரும்பவில்லை என்பதை, அன்றொரு நாள் நீ எனக்குச் சொல்லியிருந்தாய். அதையும் நான் மறக்கவில்லை.

எதற்கும், யோசித்துச் செயலாற்றுவதுதான் நல்லது. அவசரமான முடிவை நாங்கள் எடுத்து, பின் விளைவுகளைத் தீய விளைவுகளாக ஆக்கக் கூடாது. அதே நேரத்தில், வயது போய் வாழ்வின் இன்பத்தை இழப்பதையும் நான் விரும்பவில்லை. இதைப்பற்றி உனது அடுத்த மடலில் எழுதுவாய்தானே? வேறு புதினங்கள் இல்லை. உன்னையும் உனது வீட்டாரையும் இறைவன் ஆசீர்வதிப்பார். இயேசு காப்பாற்றுவார்.

-அன்புடன்-
கிறிஸ்ரோபர்.

இந்தக் கடிதம், கிறிஸ்ரினாவின் கண்களைக் கலக்கி, கண்ணீரைப் பெருக்கெடுத்து ஓடச் செய்தது உண்மைதான். கத்திக் கதறி அவளால் அழுவதற்கு முடியாவிட்டாலும், மீறிவந்த விம்மலைக் கட்டுப்படுத்த அவளால் முடியவில்லை. வேதனை அவளை மூடிக்கொண்டது. கிறிஸ்ரோபரின் இந்தக் கடிதத்திற்குப் பதில் எழுதாமல், நேரடியாய்ப் போய்ச் சந்தித்தாலென்ன என்று துடித்துக் கொண்டிருந்தது அவளது மனம். ஆனால்......?

கட்டுப்பாட்டுக்குள் வளர்ந்து வந்தவள் கிறிஸ்ரினா. வாகன விபத்தொன்றில், தகப்பன் மைக்கல் இறந்த பின், ஒன்றில் தனது அண்ணனோடு, இல்லையென்றால் தனது தாயோடு, அதுவுமில்லையென்றால், தாய் மாமனோடுதான் எங்காவது போய் வருவாள். இப்பவும் அதே நிலை தான். அதனால்த்தான், தனது மனதைக், கட்டுப்படுத்த முடியாமல்க் கட்டுப்படுத்திவிட்டு ஒதுங்கினாள் தனிமையில்.

அன்றொருநாள் அவளது வீட்டில் ஒரு கும்பல்; தாய் ,அண்ணன் தாய்மாமன் ஆகியோருடன் அவளது உறவினரும் கலந்து உரையாடிக் கொண்டிருந்தனர். கிறிஸ்ரினாவைச் சம்மதிக்க வைப்பதற்காக, அவர்கள் அத்தனை பேரும் முயற்சி எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

''மாப்பிளைப் பையன், கண்டிக் கச்சேரியில உத்தியோகம். கிளாக்கர் வேலை. இதையும் வேணாமெண்ணா......''

''காலத்தை இந்த மாதிரிக் கடத்தியிட்டுப் போனியென்னா..., ஒங் கலியாணம் புள்ளையார் கலியாணம்தான்.''

''நீ விரும்பின ரெத்தினபுரிப்பையன், நம்ம குடும்பத்துக்கு ஒத்து வரமாட்டான். ஓ அண்ணனே ரெத்தினபுரிக்குப் போய், அந்தப் பையனுக்கோ அவங்க குடும்பத்துக்கோ தெரியாம, அவங்களைப்பத்தி விசாரிச்சிட்டு வந்தார் ''

''அவங்க ஜாதிக்கும், எங்க ஜாதிக்கும் எத்தனையோ இடைவெளி. எட்டாத பொருத்தம்.''

"எங்க இனத்திலே உள்ள அந்தக் கச்சேரி மாப்பிளையோட அப்பா உன்னைப் பெண் கேட்டு வந்தார்.

''நல்ல பையன், தங்கமான குணம், கண்டிக் கச்சேரியில சீவ் கிளாக். வயதுப் பொருத்தம், சோடிப் பொருத்தம் எல்லாமே ஜோரெண்ணு, நம்ம சாத்திரியாரும் சொல்லியிட்டார்.

(தொடரும்.)

*EDITORIAL.*

## A Long and Difficult Road.

Dr. Max Hunter Harrison of revered memory, a former Principal of Bangalore Theological College, during his early days as an American Missionary in Jaffna was a teacher of Latin at Jaffna College, Vaddukoddai, where he was stationed.

There were two text books in Latin prescribed for the Senior Cambridge Examination of December 1930-Vergil's "Aeneid" and Cicero's "De Bello Gallico." Candidates were however given the option of answering questions on *one* of these text books. Despite silent protests from students, Dr. Harrison went on teaching both the text books and even setting questions for the school examinations in both texts, without giving an option. The only explanation he gave for his overreach was that one of the texts was verse and the other was prose and therefore a study of both will help the students considerably in their "Unseen" and "Composition." Without doubt, it did.

A similar story of overreach in education, is told of Dr. Issac Thambyah, then Vicar at St. John's Church, Chundi kuli, who was invited by the Principal of St. John's College to take a class in English Texts for the Senior Cambridge Examination. The learned Vicar, while teaching the prescribed poems from the text, went on teaching the class the elements of "Scansion" in poetry, a subject that had very little relevance to the syllabus. Protests were made in subtle forms but were unheeded. Dr. Issac Thambiah was a man of few words. Questions were set in seansion for school examination and those marks mattered ultimately for the award of Prizes for English Literature at the College Prize Giving. But, a generation that went through the discipline were thankful to Dr. Thambiah for his overreach, which considerably benefited some of them at the University level and enabled others to hold their heads high among their compatriots who did not have such a discipline and training.

What we need in Education today (unfortuntely in the threes of many complex problems) is an 'overreach' in the classrooms, from a strict adherence to examination requirements and from the tragic spectacle of students having to gaze at knowledge at times only from intellectual "shop - windows"

A much broader spectrum of knowledge imparted to students by teachers with a capacity to overreach (using library, and laboratory workshop ,facilities in schools to the best advantage is the only means by which we can solve the most serious problem confronting the land — the quality of our future teachers and educators.

"A man's reach should be above his grasp" said Elizabeth Barrett Browning, "or what's a heaven for".

## Rock-Citadel.

City of the Elephant Rock Ethalgalpura,
Known today as Kurnegala,
Surrounded by rocks of various shapes
Of animals - the tortoise, goat, Beetle and Eel,
Capital of ancient Kings, seat of Provincial council.

A lake of azure blue nestles in thy midst
Fringed by swaying coconut palms with feathery tops,
Surrounded by luscious green fields of Paddy and Corn,
A veritable city of unity peace and plenty
To those who live here all and sundry in harmony.

The cave temple of Ethkande Purana Vihara,
Nestling at the foot of the Ebony Elephant rock,
The Maligawa of the Sinhala kings now in ruins.
The legendary surfacing of the golden Urn of gems
On the lake, are reminders of an illustrious past.

Rock-girt city, central junction town of repute,
Radiating roads to North South East and West,
Endowed with colleges and play grounds best,
Tutoring, nurturing the Multiethnic generations,
To build a bounteous city worthy of its illustrious past.

*Mrs. P. Vtsvalingam* B. Sc., Dip - in - Ed.

## PASTOR'S MEMORIES — 3.

## Your Pastor And You

In many Churches today, it seems that the Pastor is not respected well. No matter how sincere he may be or how hard be tries, there are always some who stand ready to find fault and to criticize. Someone has expressed the situation in this way:

If the Pastor is young, they say he lacks experience;
If his hair is grey, he's too old for the young people;
If he has five or six children, he has too many;
If he has no children, he's setting a bad example;
If he preaches from notes, he has Canned Sermons and is dry;
If his messages are extemporaneous, he is not deep;
If he is attentive to the poor people in the Church, they claim that he is playing to the grandstand;
If he pays attention to the wealthy; he is trying to be an aristocrat;
If he uses too many illustrations, he neglects the Bible;
If he doesn't use enough stories, he isn't clear
If he condemns wrong, he's cranky;
If he doesn't preach against sin, they say he's a compromiser;
If he preaches the truth, he's offensive;
If he doesn't preach the truth, he's a hypocrite;
If he fails to please everybody he's hurting the Church and ought to leave;
If he does please everybody, he has no convictions;
If he drives an old car, he shames his congregation;
If he drives a new car, he is setting his affection upon earthly things;
If he preaches all the time, the people get tired of hearing one man;
If he invites Guest preaches, he's shirking his responsibility;
If he receives a large salary, he's mercenary;
If he receives a small salary—well, then they say, it proves he isn't worth much anyway.

Now I realize that this analysis of the situation tends to exaggerate the case, but it does emphasize nevertheless the general attitude found in so many places today. It doesn't seem to make much difference where you go, or which Church you attend, there's always that one group or faction who is 'down' on the Pastor.

(selected)

## Do You Know?

**News About Newspapers**

Do you know that newspapers do not measure people only exhibit them?

Do you know that newspapers are a sort of public Con fessional?

Do you know that the Corrupter who needs darkness for his success dreads an honest newspaper?

Do you know that newspapers do not know sometimes— What news is news?

selected.

## MORNING STAR

We wish to inform our readers that due to rising costs and the increase in the pages of the Morning Star we have revised the annual subscription as follows:

| | | |
|---|---|---|
| **INLAND** | Rs. | 100-00 |
| **EUROPE, AUSTRALIA & MALAYSIA** (Air Mail) | Pounds | 10-00 or **Equivalent** |
| **U. S. & AFRICA** (Air Mail) | Dollars | 15-00 |
| **INDIA, PAKISTAN & BANGLADESH** (Air Mail) | Indian Rs. | 150-00 |

Registered as a Newspaper at the G. P. O. Sri Lanka under No. Q/J/104/89 News
Printed for the Jaffna Diocese of the Church of South India at American Ceylon Mission Press. 182,1st,Cross Street Jaffna on Friday. 05 January 1990. and published by The Rev T. THEVANESAN, 182 First Cross Street, Jaffna.